**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No. 329/2026.**

**Yelagiri Police Station**

**Cr.No.31/2018**

| | | |
|---|---|---|
| 1. Deposition of Witness for | : | PW 7 |
| 2.Name | : | திரு.வெங்கடாசலம் |
| 3.Father's Name | : | சின்னசாமி |
| 4.Village | : | கட்டரசம்பட்டி |
| 5.Taluk | : | அரூர் |
| 6.Calling | : | காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| 7.List witness | : | LW 14 |
| 8. Age | : | 63 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** in accordance with the provision of Act X of 1873 of the day of **16.07.2026.**

எதிரி ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம்–12.14 PM

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்– 12.52 PM

<u>முதல் விசாரணை</u>:–

நான் காவல் துறையில் காவல் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். (இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் திரு.நாமதேவன் என்பவரை எனக்கு நன்கு தெரியும், அவரின் கையெழுத்து எனக்கு பரீட்சயம். மருத்துவர் Tr.Kheliq Basha, மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கதிர்வேல் ஆகியோருக்காகவும் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தயாரித்த ஆவணங்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்துரைகளை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்ய எதிரி தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.) கடந்த 19.10.2018 அன்று திரு.நாமதேவன், காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய அலுவலில் இருந்த போது பாலாஜி என்பவர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று ஏலகிரி காவல் நிலைய குற்ற எண்.31/2018, U/s 279, 304(A) IPC ன் படி 19.10.2018ம் தேதி மாலை 18.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் மனு ஏற்கனவே அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை **<u>அ.த.சா.ஆ.2.</u>** பின்னர் வழக்கு கோப்பினை என்னிடம் ஒப்படைக்கப்பட்டு நான் கோப்புகளை பெற்று புலன் விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு கடந்த 20.10.2018 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பழனி மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். பார்வை மகசர் **<u>அ.த.சா.ஆ.3.</u>** மாதிரி வரைப்படம் **<u>அ.த.சா.ஆ.4</u>**. வழக்கின் சாட்சிகளான பாலாஜி, பூவன், நீலமேகம், நாகராஜ், பெருமாள், ஆறுமுகம், குமார், முனிசாமி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன். இறந்த ராஜ்குமார் பிரேதத்தை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் 20.10.2018 அன்று காலை 09.00 மணி முதல் 11.00 மணிவரை வாணியம்பாடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். ராஜ்குமார் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை **<u>அ.த.சா.ஆ.5.</u>** பின்னர் இறந்துபோன ராஜ்குமார் என்பவரது பிரேதத்தை உரிய வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் மூலம் சடலக்கூறாய்வுக்கு அனுப்பிவைத்தேன். சடலக்கூறாய்வு செய்த மருத்துவர் Tr.Kheliq Basha என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சடலக்கூறாய்வு அறிக்கை பெற்றேன். ராஜ்குமார் என்பவரின் சடலக்கூறாய்வு அறிக்கை **<u>அ.த.சா.ஆ.6.</u>** கடந்த 22.10.2018 அன்று காவல் நிலையத்தில் ஆஜரான எதிரி வினோத்குமார் என்பவரை முறைப்படி காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமின் பிணையத்தில் விடுவித்தேன். பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனமான AP 03 CT 2980 இருசக்கர வாகனம் மற்றும் TN 01 AH 9257 கார் ஆகிய வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கதிர்வேல் என்பவரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். AP 03 CT 2980 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.7.** TN 01 AH 9257 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.8.** விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.9.** இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 279, 304(A) IPC படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

வழக்கு கோப்பு எந்த தேதியில் எத்தனை மணிக்கு உங்கள் பார்வைக்கு வந்தது என்றால் 19.10.2018 அன்று சுமார் இரவு 08.00 மணிக்கு என் பார்வைக்கு வந்தது. முதல் தகவல் அறிக்கையில் எவ்வளவு நேரத்திற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்ற தகவல் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு வாகனங்கள் சம்பவத்தில் ஈடுபட்ட போது தீங்கிழைத்த வாகனம் குறித்து நீங்கள் அடையாளம் கண்ட பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் இராஜ்குமாரின் விபத்து பதிவேட்டில் 19.10.2018 அன்று 02.40 மணிக்கு உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவமானது 01.40 மணிக்கு நடந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் 02.40 மணிக்கு உள்நோயாளியாக சிகிச்சையில்

சேர்த்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் விபத்து எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்பது குறித்து மருத்துவரிடம் கார் மோதியதில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். 20.10.2018 சடலக்கூறாய்வு அறிக்கையில் 12.00 முதல் 01.30 மணியளவில் சடலக்கூறாய்வு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபர் இறந்த நேரம் குறித்து ஆவணத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் 19.10.2018 பகல் 01.40 மணிக்கு இறந்ததாக என் விசாரணையில் தெரிய வந்தது. நீங்கள் ஆவணங்களை சரிவர பார்க்காமல் நீதிமன்றத்திற்கு தவறான சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டின் படி சாட்சி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட நேரம் பகல் 01.40 மணி எனவும் அந்த நேரத்தில் மேற்கண்ட நபர் உயிருடன் இருந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்ட நபரின் உறவினர்கள் யாரிடமும் இருந்து புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். காரின் ஓட்டுநர் புகார் கொடுத்தார். இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 3 நீலமேகம் என்பவர் Forest conservative Officer ஆக உள்ளார் என்றால் சரிதான். மேற்படி நபர் காரில் பயணம் செய்த காரணத்தினால் அந்த கார் ஓட்டுநரை காப்பாற்றும் பொருட்டு மேற்படி அலுவலரின் அழுத்தம் காரணமாக குற்றம் இழைத்த கார் ஓட்டுநரிடம் புகாரை பெற்று வழக்கு செய்யாமல் இருசக்கர வாகன ஓட்டுநரின் மீது வழக்கு பதிவு செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எவ்வளவு நேரத்திற்கு சம்பவ இடம் சென்றீர்கள் என்று

சொன்னால் 20.10.2018 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். சம்பவ இடத்தை உங்களுக்கு அடையாளம் காட்டிய நபர் யார் என்று சொன்னால் புகார்தாரர் பாலாஜி. பாதிக்கப்ட்ட நபர்களுடன் இருந்தவர்கள் யாரையும் நீங்கள் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலும் கிடைக்கப்பெறவில்லை. எந்த வாகனம் எந்த திசையை நோக்கி பயணித்தது என்றால் கார் கீழிருந்து மலை மீது ஏறியும், இருசக்கர வாகனம் மலையிலிருந்து கீழ்பகுதியில் இறங்கிக்கொண்டு வந்திருந்தது. காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் காரின் முன்பகுதியில் உள்ள FRONT BUMPER RSH PRESSED AND DAMAGED என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் முன்பகுதியின் இடது பகுதியில் SCRATCH MARK IN LHS CROSS BAR SCRATCH MARK IN FOOT REST PRESSED AND DAMAGED என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காரின் ஓட்டுநர் வேகமாக வந்து இருசக்கர வாகனத்தை மோதி காரணத்தினால் தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சேதம் குறித்து அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உங்களது விசாரணையில் காரின் ஓட்டுநர் கொடுத்த புகார் மற்றும் மருத்துவ ஆவணங்களின் உண்மை தன்மையை கண்டறியாமல் மெத்தனப்போக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. விபத்துக்கான காரணம் கார் ஓட்டுநரான அ.சா.1–ன் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாத காரணத்தினால் தான்

பாதிக்கப்பட்ட நபரை எதிரியாகவும், தீங்கிழைத்த வாகனத்தின் ஓட்டுநரை பாதிக்கப்பட்ட நபராகவும் சித்தரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over by the Witness through Video conferencing, admitted and acknowledged by him to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.07.23 16:57:10 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.